**சியம்பலாண்டுவ பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சியம்பலாண்டுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சியம்பலாண்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை- | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சார உபகரணங்களின் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 232,998 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் உரிய பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சரியான பெறுமதி அடிப்படையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்துக்காக கிடைத்திருந்த மூலதனச் செலவினமாக செலவிடப்பட்ட ரூபா 42,380,096 தொகையும் மீண்டெழும் செலவினமாக செலவிடப்பட்ட ரூபா 3,752,008 தொகையும் மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்கால நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பொருத்தமான வகையில் கணக்கு வைத்து குறைபாடுகளை சீராக்குவதற்கு ஆலோசணை வழங்கியுள்ளேன் | அனைத்து வரு வருமானங்களும் செலவினங்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | :மீளாய்வாண்டின் திசெம்பர் 31 தூண்டில் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டில்கள் ரூபா 160,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு ஆலோசணை வழங்கியுள்ளேன் | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நலன்புரி சேவைகள் மற்றும் பொது வசதிகளின் கீழ் செலவிடப்பட்ட மூலதன செலவின விடயங்களுக்குரிய பணமாக கொடுப்பனவு செய்யப்படாத நிர்மான | இக் கணக்கீட்டு குறைபாடுகளை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைத் | காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர் ரூபா 491,877 காசுப் பாய்ச்சல் கூற்றில் மூலதன கொடுப்பனவின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது | தயாரிக்கும் போது மேற்கொள்ளாமல் இருப்பதற்கு உரிய ஆலோசனை வழங்கியுள்ளேன் | இனங் காணப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 411,689,845 ஆக இருந்த போதும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்புக் கணக்கு மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமான மானியங்கள் மூலம் பங்களிப்பு கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 412,087,959 ஆக இருந்தது. | இவ்வேறுபாட்டை 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதிகள் இனங் காணப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாத இரண்டு செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 42,383,834 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது | இவ்வாறான கணக்கீட்டு குறைபாடுகளை எதிர்கால நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மேற்கொள்ளாமல் இருப்பதற்கு உரிய ஆலோசனை வழங்கியுள்ளேன் | வருமானங்கள் செலவினங்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டுஇ னங்காணப்பட வேண்டும் |
| (எ) | ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நூலக புத்தகங்களின் பெருமதி ரூபா 156,191 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 328,862,219 கூட்டுப்பெறுமதியான 02 சொத்து விடயங்கள் தொடர்பாக உரித்து உறுதி, தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சபைக்குரிய காணி மற்றும் ஏனைய சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன் | சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பெறுமதி சரியான இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1-7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) (அ) பிரிவு | சபையினால் பேணிச் செல்லப்படும் வீதிப் பதிவேட்டில் உள்ள 140 வீதிகள் வர்த்தமானியில் | வீதிப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு அவ்வீதிகளை வர்த்தமானியில் | வீதிப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட வேண்டியதுடன் வீதிகளை |

| | | | |
|---|---|---|---|
| | பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை | பிரசுரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | சபையில் சேவை புரிந்த சபை செயலாளர்ால் 2019 பெப்ரவரி 7 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 20,000 ஆன முற்பணத்தை 2023 பெப்ரவரி 07 ஆம் தேதி வரையில் தீர்வு செய்திருக்கவில்லை. | அம்முற்பணத் தொகையை தீர்வு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு குறித்து உத்தியோ கத்தருத்தருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த செயற்பாடும் உடைந்தவுடன் முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 | பிரதேச சபையில் பிணை வைக்க வேண்டிய 19 உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் ஊழியர் பிணை வைப்புக்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தயவுடன் அறியத் தருகிறேன் அனைத்து உத்தியோகத்தர்களினது ம் பெயர் உள்ளடக்கப்பட்ட பிணைப் பொறுப்பு பதிவேடுஒன்றை ஆரம்பிப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தரால் பிணைவைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பதிவேடு ஒன்றும் பேணிச் செல்லப்பட வேண்டும் |
| (இ) 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை | சபையினால் பராமரிக்கப்படும் வீதி விளக்குகள் பதிவேடின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 1521 வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டிருந்த போதும் வீதிவிளக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட இருக்கவில்லை | எதிர்காலத்தில் இச்செயற்பாடுகளை சரியாக மேற்கொள்ளுமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 943,464 ஆக இருந்ததுடன் அதனோடொத்த எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,811,710 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,000 | - | - | - | 5,000 | - | - | - |
| (ii) | வாடகை | 12,897,775 | 12,335,379 | 11,660,769 | 674,610 | 10,318,200 | 9,472,807 | 6,079,583 | 3,393,223 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,830,200 | 1,052,600 | 1,037,600 | 15,000 | 1,762,500 | 1,479,310 | 1,467,310 | 12,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,916,814 | 10,425,389 | 7,933,204 | 2,492,185 | 14,375,536 | 9,718,055 | 8,940,772 | 777,283 |
| | | 31,649,789 | 23,813,368 | 20,631,573 | 3,181,795 | 26,461,236 | 20,670,171 | 16,487,665 | 4,182,506 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 23,813,368 ஆன் மொத்த வருமானத்தில் என்பதையும் அறவிடப்பட்ட ரூபா 3,181,795 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 13 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குரிய அதிமலே வாரச்சந்தையின் 18 திறந்த கடைகளுக்குரிய 2013 ஆம் | இன் நிலுவையை அறவிடுவதற்கு அவ்வப்போது கடிதங்கள் அனுப்பி | நிலுவை வருமானத்தை விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் முன்னர் அறவிடப்பட வேண்டியதாக காணப்படுகின்ற ரூபா 65,400 ஐ 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்க வில்லை | வைக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அத்தொகை அறவிடப்படவில்லை. | அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | சியம்பலாண்டுவ பிரதேச சபைக்குரிய மெடபத்த நீர் செயற்திட்டத்தின் 130 நீர் பாவனையாளர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 143,632 ஆன நிலுவை நீர்க் கட்டணணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அறியத் தருகிறேன் | நிலுவை வருமானம் விரைவில் அ்றவிடப்பட வேண்டும் |
| (உ) | மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 123,125 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 2,423,009 தொகை பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை வழங்குமாறு குறித்த நிறுவனங்களுக்கு கடிதங்கள் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானங்களை விரைவில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | சபை அதிகார பிரதேசங்களில் வெவ்வேறு நிறுவனங்கள் / ஆட்களால் காட்சிப்படுத்தப் பட்டிருந்த 73 நிலையான விளம்பர அறிவித்தல் பதாதைகளில் இருந்து மீளாய்வாண்டிற்குரிய ரூபா 374,680 தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை தொகைகளை வழங்குமாறு நிறுவனங்கள் / ஆட்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவில் அ்றவிடப்பட வேண்டும் |
| (ஊ) | 2014 முதல் 2021 காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 286,850 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய அறுவிடப்பட வேண்டிய ரூபர் 282,800 ஆன நிலுவை இயந்திர வாடகை வருமானம் 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்படுவதற்கு உள்ள இயந்திர வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவில் அ்றவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையால் செல்லுபடிக்காலம் முடிவடைந்து இருந்த 17 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்களை புதுப்பிப்பதற்கும் புதிதாக இனங்காணப்பட்ட 7 நிர்மாணங்களுக்காக சுற்றாடல் அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிபத்திரங்களை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் காணப்பட்டது எதிர்காலத்தில் கைத்தொழில்களை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகிறேன். | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய 04 நூலகங்களில் 2000 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய காலப்பகுதியில் வாசிப்போருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 103,429 கிரயமான 464 நூலகப் புத்தகங்களை 2023 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையில் மீள பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குறித்த புத்தகங்களை அல்லது புத்தகத்தின் பெறுமதியை அறவிடுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வாசிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நூலக புத்தகங்களை உரிய காலப் பகுதிக்குள் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும |
| (ஆ) | சபையின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக இனங் காணப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு 2023 பெப்ரவரி 7 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்ட எடுக்கவில்லை | சபை தீர்மானத்தின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு குறித்த அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | மேம்படுத்தப்பட்ட பிரதேசங்களை இனம் காணப்பட்டு வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தி வெளியிட்டு வீதவரி அறவிடப்பட வேண்டும் |
| (இ) | பிரதேச சபைக்குரிய சியம்பலாண்டுவ வாரச்சந்தை வளவில் 08 கடைகள் 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி | இந்த 08 கடைகளும் இரண்டு தடவைகள் பெறுகை செய்யப்பட்டிருந்த | சபைக்கு சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்கி |

| | | |
|---|---|---|
| வரையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை | போதும் கடைகளை பெற்றுக் கொள்வதற்கு எவரும் முன் வரவில்லை. | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) பிரதேச சபைக்குரிய 05 சனசமூக மண்டபங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | சனசமூக மண்டபம் அமைந்துள்ள காணிகளில் சிக்கல்கள் காணப்படுவதால் இச் சிக்கல்களை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சரியாக இனங் கண்டு பெறுமை கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு சீராக்கத்தின் பொருள மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டு இறுதி இருப்பு கணக்கிடப்படாதிருந்ததுடன் குறித்த விடயப் பொறுப்பு உத்தியோத்தரால் வழங்கப்படும் மீதிகளை அடிப்படையாக கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதல் அடுத்த கணிப்பீட்டு சபை மூலம் இறுதி இருப்பினை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இறுதி இருப்ப கணிப்பீடு செய்தல் முறையான பரிசோதனை சபை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சியம்பலாண்டுவ பிரதேச சபையின் சேதன பசளை உற்பத்தி செயற்திட்டத்திற்காக திண்ம கழிவுகளை துண்டுகளாக்கும் இயந்திரம் ஒன்றை ரூபா 735,000 தொகை செலவிடப்பட்டு 2022 ஜனவரி 13 ஆம் கொள்வனவு செய்யப் பட்டிருந்ததுடன் 2023 பெப்ரவரி 06 ஆம் திகதி வரையிலும் அவ் வியந்திரத்தை நோக்கத்திந்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | இந்த இயந்திரம் உழவு இயந்திரத்தின் T சட்டகத்ததுடன் பொருத்தப்பட்டு திண்மக் கழிவுகள் அரைக்கப்படுகின்றது. அவ்வாறே தேவையான போது இந்த துண்டாக்கள் இயந்திரம் கழற்றி உழவு இயந்திரத்தை வேறு செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றன | குறித்த இயந்திரத்தை உயர்ந்த செயற்தினுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திகு ஈடுபடுத்த வேண்டும். சேயற்த்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு உரிய குபோட்டா கை உழவு இயந்திரம் டேலர் மற்றும் மண் பதப்படுத்தும் இயந்திரம் என்பன முறையே 2010 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இருந்து பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதும் 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையில் அவற்றை திருத்துவதற்கும் அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | குறித்த இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான திருத்தப்பட வேண்டிய அல்லது கைதவிர்க்கப்பட வேண்டிய வாகனங்கள் இயந்திரங்கள் உரிய காலத்தில் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குரிய மின்பறிப்பாக்கி இயந்திரம் 2016 ஆம் ஆண்டு முதல் செயலற்று காணப்பட்டதுடன் அதனை திருத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த மின்பிறப்பாக்கியை கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக | இயந்திர திருத்தம் செய்தல் அல்லது கைதவிர்த்தல் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (இ) | சபைக்கு சொந்தமான பெக்கோலோடர் இயந்திரம் 2020 செப்டம்பர் 08 திகதி விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் குறித்த திருத்தங்களுக்காக ரூபா 170,586 தொகை செலவு ஆகுமென முகவர் நிறுவனத்தினால் அன்றே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் விபத்து இடம்பெற்று 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் 2023 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை அது திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை | திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக தேவையான அங்கீகாரம் கிடைத்தவுடன் அதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு திருத்தங்களை விரைவில் செய்யப்பட வேண்டும |
| (ஈ) | சபைக்கு உரிய வெவ்வேறு அளவிலான 25 காணிகளை அளவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்திருந்ததுடன் 86 காணிகளுககுரிய சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணியை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான உரித்தை கையேற்க வேண்டும். |
| (உ) | பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் கீழ் நகர அலங்காரத்திற்காக 2022 மார்ச் 10 ஆம் திகதி ரூபா 219,500 தொகை செலவழித்து 10 சோலா வீதி விளக்குகளும் 10 உதிரி பாகங்களுதும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு தினமான 2023 மார்ச் 07 ஆம் திகதி வரையிலும் 10 சோலா வீதி விளக்குகளில் 02 மாத்திரம் பொருத்தப்பட்டு இருந்ததுடன் எஞ்சிய வீதி விளக்குகள் களஞ்சியத்தில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் ஆறு மாதங்கள் உத்தரவாத காலத்துடன் கூடிய ரூபா 137,600 பெறுமதியான 8 வீதி விளக்குகளின் உத்தரவாத காலமும் முடிவடைந்து 6 மாதங்கள் கடந்திருந்த போதும் அவற்றை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கொள்வனவு செய்யப்படும் பொருட்களை கால தாமதம் இன்றி உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் 6 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 120,560 ஆன தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஊழியர் கடன்களை விரைவில் வரவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | ஊழியர் கடன்களை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 05 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 05 ஊழியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையில் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பதவியணி வெற்றிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் பதவி அணி அறிக்கை அனுப்பும் போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |